மதிய உணவாக
கோழி பிரியாணி
ருசியிக்க நூடில்ஸ் வகைகள்
றிக்கோ
கோப்பியை அரைத்துப்
பெற்றுக்கொள்ள

செந்தாமரை
(றிக்கோ)
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

★ ஐஸ்கிறீம் வகைகள்
★ பாலூத்தா சர்பத்
★ மிக்ஸ் ஜூஸ்க்கும்

செந்தாமரை
(றிக்கோ)
குளிர் தடாகம்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 26 சனிக்கிழமை (12 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 353

## அனுருத்தவுக்கு பாதுகாப்பு அமைச்சர் பதவி;
## எனினும் ஆயுதப்படை தலைவராக சந்திரிகாவே

கொழும்பு, நவ. 12

சந்திரிகா குமாரதுங்க புதிய ஜனாதிபதியாக இன்று பதவி யேற்றபின்னர் அமைக்கப் படும் புதிய அமைச்சரவை யில் —

பாதுகாப்புஅமைச்சர் பதவி கேணல் அனுருத்த ரத்வத் தைக்கு வழங்கப் படவிருக் கிறது.

தற்போது பிரதி பாது காப்பு அமைச்சராக இருக் கும் அனுருத்த ரத்வத்தை அனேகமாக அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்ச ராகப் பதவி உயர்த்தப்பட்டு பாதுகாப்பு அமைச்சு அவ ருக்கு வழங்கப்படும் என தாம் நம்புவதாக தகவல், ஒலிபரப்பு, விமானப் போக்கு வரத்துத்துறை அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளருமான தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

பி.பி.சி.யின் கொழும்புச் செய்தியாளருக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

தற்போதைய அரசமைப் புப்படி ஜனாதிபதி ஒருவர் தான் விரும்பிய அமைச்சு களைத் தன்வசம் வைத் திருக்க முடியும்.



சிறுபான்மை மக்கள் தம் மீது நம்பிக்கை வைத்திருப்ப தால் அவர்களின் நலன் களைக் கவனிப்பதற்காக — தாம் பிரதமராக இருந்த போது வைத்திருந்த — இன விவகார, தேசிய ஒருமைப் பாட்டு அமைச்சையும் அத் துடன் நிதி அமைச்சையும் சந்திரிகா குமாரதுங்கா தன் வசம் வைத்திருப்பார் என நான் நம்புகிறேன்.

பாதுகாப்பு அமைச்சர் பத விக்கு கேணல் அனுருத்த ரத் வத்தை நியமிக்கப்படுவார். எனினும் அரசமைப்புப்படி ஆயுதப்படைகளின் தலைவர் (Commander — in — Chief) என்ற பொறுப்பு ஜனாதிபதி யாகும் சந்திரிகாவிடமே இருக்கும்.

—இவ்வாறு அமைச்சர் சேனநாயக்கா மேலும் தெரி வித்தார்.

1978 இல் புதிய அரச மைப்பு நடைமுறைக்கு வந் தது முதல் இதுவரை ஆட்சி யில் இருந்த மூன்று ஜனாதி பதிகளும் ஆயுதப் படைகளின் தலைவர் என்ற பொறுப்புக்கு மேலாக பாதுகாப்பு அமைச் சர் பதவியையும் தங்கள் வசமே வைத்திருந்தனர் என் பது குறிப்பிடத்தக்கது.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா - ஸ்ரீமாவோ டி. பிக்கு பிரியாவிடை

கொழும்பு, நவ, 12

புதிய ஜனாதிபதியாக இன்று பதவி ஏற்க உள்ள சந்திரிகா குமாரதுங்கா, அவ ரது தாயார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, மற்றும் பொது மக்கள் ஐக்கிய முன் னணி அரசின் அமைச்சர்கள் பிரியாவிடை அளிக்கு முக மாக நேற்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவைச் சந்தித் தனர்.

ஜனாதிபதி விஜேதுங்கா இந்த சந்திப்பை ஒழுங்கு செய்திருந்தார்.

இந்த நிகழ்ச்சியில் திருமதி குமாரதுங்கா உரையாற்று கையில், ஜனாதிபதி விஜே துங்கா தனது பதவிக் காலத் தில் ஆற்றியசேவைகளை பாராட்டினார்.

நாட்டின் ஜனநாயக முறை யையும் அபிவிருத்தியையும் ஸ்திரப்படுத்த ஜனாதிபதி விஜேதுங்கா எடுத்த நடவ டிக்கைகளையும் அவர் வர வேற்றுப் பேசினார்.

ஜனாதிபதி விஜேதுங்கா பதிலளித்துப் பேசுகையில், பொதுமக்கள் ஐக்கிய முன் னணி அரசாங்கம் குறுகிய காலத்தில் நாட்டில் ஜனநாய கத்தையும், சமாதானத்தை யும் மீண்டும் நிலைபெறச் செய்வதற்கான அடித்த ளத்தை அமைத்துள்ளது என்று கூறினார்.

(இ-4)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், நவ. 12

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடை பெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையி னர் அறிவித்துள்ளனர்.

(இ-3)

## ஊரடங்கு

கொழும்பு, நவ. 12

நேற்று மாலை அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணிக்கு நீக் கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

(இ-4)

# ஜனாதிபதியாக இன்று சந்திரிகாவும்
# பிரதமராக நாளை ஸ்ரீமாவும் பதவி ஏற்பு

முச்சந்தி முரளி



அப்ப மற்றொரு உலக சாதனை எண்டு சொல் லுங்கோ!

## அரசமைப்பை மாற்றுவது குறித்து இருவாரங்களில் திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, நவம்பர் 12

ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய திருமதி சந்திரிகா குமாரதுங்கா நாட்டின் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இன்று சனிக்கிழமை காலை பதவிப் பிர மாணம் செய்து கொள்வார். இதனைத் தொடர்ந்து திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நாளை ஞாயிற்றுக்கிழமை பிரதம ராகப் பதவி ஏற்கிறார்.

78 வயது நிரம்பிய திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை புதிய பிரதமராக நியமிப்பது என பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் முக்கிய அமைச்சர்கள் நேற்று முடிவு செய்தனர்.

அரசமைப்பைத் திருத்துவது தொடர்பான தனது திட்டங்களை பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு இன்னும் இரு வாரங்களில் ஒரு சிறப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

திருமதி சந்திரிகா குமார துங்கா ஜனாதிபதி செயலகத் தில் பிரதம நீதியரசர் திரு. ஜி.பி.எஸ்.டி. சில்வா முன்னி லையில் இன்று பதவிப்பிரமா ணம் செய்வார் என்று அறி விக்கப்பட்டுள்ளது.

இந்த வைபவம் ஆடம்பர மற்ற முறையில் நடைபெறும் என்று உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உணவுத்துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

முப்படைகளும் புதிய ஜனாதிபதிக்கு மரியாதை அணிவகுப்பை நடத்துவ துடன் இந்நிகழ்ச்சி முடிவ டையும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

நாளை ஞாயிற்றுக்கிழமை புதிய பிரதமராக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பதவி ஏற்கும்போது மாற்றி யமைக்கப்பட்ட புதிய அமைச் சரவையின் அமைச்சர்களும் பதவிப்பிரமாணம் செய்து கொள்வார்கள்.

அமைச்சரவையின் முக்கிய உறுப்பினர்கள்கூடி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை பிர தமராக நியமிப்பது என்ற முடிவை எடுத்தனர் என் றும் —

முழு அமைச்சர்களும் இன்

(3ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க

## தற்போதைய நாடாளுமன்றமே அரசமைப்பு நிர்ணய சபையாக மாறும்

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து, நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறவேண்டிய பிரதமர் ஆட்சி முறையை ஏற்படுத்தும் புதிய அரசமைப்பை உருவாக்குவ தற்காக—

தற்போதைய நாடாளு மன்றமே அரசமைப்பு நிர் ணய சபையாக (Constitutional Assembly) மாறும்.

தகவல், ஒலிபரப்பு, விமா னப் போக்குவரத்துத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்கா பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் இத்தக வலைத் தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை அடுத்த ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒழிக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## டி. பிக்கு ஓய்வூதியமாக மாதம் 25 ஆயிரம் ரூபா

கொழும்பு, நவ. 12

பதவி விலகும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு மாதாந்தம் 25ஆயிரம் ரூபா ஓய்வூதியமாக வழங்கப்பட வுள்ளது.

கொழும்பு 7இல் அவருக்கு அரச செலவில் ஒரு வீடு வழங் கப்படவுள்ளது. அவரின் அலு வல்களைக் கவனிக்கவென பத்து ஊழியர்களையும் அரசு நியமிக்கும்.

புதிய ஜனாதிபதி பதவி யேற்றதும் திரு. விஜேதுங்கா ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறி, தமக்கு விஜேராம வீதியில் ஒதுக்கப் பட்டுள்ள வீட்டில் குடியிருக் கச் சென்று விடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## சமாதானம் ஏற்படும் வரை அரசின் முயற்சி தொடரும்

கொழும்பு, நவ. 12

வடக்கு - கிழக்கில் யுத்தம் நிறுத்தப்பட்டு, சமாதானம் ஏற்படும்வரை அரசாங்கத் தின் சமாதான முயற்சி தொடரும்.

கடற்றொழில் அமைச்சர் இந்திகா குணவர்த்தனா முன்கண்டவாறு தெரிவித் தார்.

சமாதான முயற்சிக்கு எதி ராக சில சக்திகள் செயல்படு கின்றன. எனினும் சமாதான முயற்சியை அரசு கைவிடாது என்றும் அவர் கூறினார்.

(இ-எ)





## மற்றொரு வள்ளமும் மூழ்கியது

குருநகர், நவ. 12

கடந்த புதன் இரவு பூநகரி - கல்முனை கடற்பகுதிக்கு தொழிலுக்குச் சென்ற மீன வர்களின் மற்றொரு வள்ள மும் கடற் கொந்தளிப்புக் காரணமாக நீரில் மூழ்கிய தாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூழ்கிய வள்ளத்தில் இருந்த மூவரில் இருவர் நீந்திக் கரை சேர்ந்தனர். மற்றவரான குருநகர் கடற்கரை வீதியைச் சேர்ந்த அருளானந்தம் அல் போன்ஸ் (கிளியன், வயது 42) என்பவர் நேற்று மாலை வரை கரை திரும்பவில்லை.

(ஐ-51)

## புலிகளுடன் பேச்சு நடத்தும் முடிவே சந்திரிகா வெற்றிக்குக் காரணம்

### பிரிட்டிஷ் பத்திரிகைகளில் செய்தி

லண்டன், நவ. 12

ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கா பெரு வெற்றியீட்டியதற்கு, அவர் விடுதலைப் புலிகளுடன் சமா தானப் பேச்சு நடத்தப் போவதாகப் பகிரங்கமாகப் பல தடவைகள் பிரசாரம் செய்ததே காரணம் என்று பிரிட்டனில் வெளியாகும் ''இன்டிப்பெண்டன்ற்'' பத் திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று விடாப்பிடியாக கூறிய தற்காக 'விசயம் தெரியாத வர்' என்று இராணுவத்தால் கடந்த காலத்தில் மட்டம் தட்டப்பட்ட சந்திரிகா இனி உறுதியாக நின்று போர் நிறுத்தம் செய்யுமாறு படைத் தளபதிகளை வற்புறுத்தலாம் என்று அந்தப் பத்திரிகையின் செய்தியாளர் ஒருவர் எழுதி யுள்ளார்.

எதிர்க்கட்சியின் ஜனாதிபதி

(3ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப் பேச்சைத் துரிதப்படுத்த ஐரோப்பிய நாடாளுமன்று கோரும்!

### அருட்திரு எஸ்.ஜே.இம்மானுவேல் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 12

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே ஆரம் பிக்கப்பட்ட சமாதானப் பேச் சுக்களைத் துரிதப்படுத்து மாறு ஐரோப்பிய நாடாளு மன்றம் விரைவில் அரசாங் கத்தை கோரவுள்ளது. அத் துடன் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தைத் தவிர்த்து பேச் சுக்கள் மூலமே தீர்வு காணப் படவேண்டும் என்பதையும் அது வலியுறுத்தவுள்ளது.

யாழ். ஆயர் இல்ல குரு முதல்வர் அருட் திரு எஸ். ஜே. இம்மானுவேல் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் ஜேர்மனி, சுவிஸ், பிரிட்டன் மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு சென்று திரும்பிய அவர் நேற்று நடத்திய செய்தியா ளர் சந்திப்பின்போது இத னைத் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் விஜயம் செய்த நாடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புக்கு தனிப்படை

### இந்தியாவின் உதவியை இலங்கை கோரும்

கொழும்பு, நவ. 12

முக்கிய அரசியல்வாதிகள், மற்றும் பிரமுகர்களின் பாது காப்புக்காக இ[illegible] உதவியுடன் படை ஒன்றை அமைக்க இல[illegible] திட்டமிட்டுள்ளது.

இது சம்பந்தமாக இலங்கை அரசு இந்தியாவுடன் [illegible] வெளிநாட்டு [illegible]

[illegible] கொலை செய்யப்பட்டதை அடுத்தே இலங்கை அரசு இந்த முடிவுக்கு வந்ததாக [illegible] தெரிவிக்கப்பட்டது.

காமினி திஸாநாயக்காவின்

(3ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பரேஷன் தவளை நினைவுநாள் நேற்று

யாழ்ப்பாணம், நவ. 12

பூநகரி — நாகதேவன்துறை கூட்டுப்படைத் தளங்கள் மீது கடந்த ஆண்டு விடுதலைப் புலிகள் நடத்திய ''ஒப்ப ரேஷன் தவளை'' இராணுவ நடவடிக்கையின் ஓராண்டு நினைவு நாள் நேற்று குடாநாட்டில் நினைவு கூரப்பட்டது.

இரண்டாவது ஈழப்போரின் வரலாற்றில் புதியதோர் பரிமாணத்தை உருவாக்கிய அந்த வெற்றிகரமான தாக்கு தலில் களப்பலியான வேங்கைகள் நினைவாக நேற்று பல இடங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

வீரச்சாவடைந்த போராளிகளின் உருவப்படங்களுக்கு

(3ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லினச் செவ்விளநீர் தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு. கனகசுந்தரம், டச் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (8009)

நல்லின தேசிக் கன்றும், தோடங்கன்றும் விற்பனைக்குண்டு. விலை ரூபா 10/- மட்டும். Taste Line Industries (Pvt) Ltd., 14, Seenier Lane, Jaffna. (சி-9655)

ஒரு சணல் ஆடும், ஓர் கடா குட்டியும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: இல 2, திருவள்ளுவர் ஒழுங்கை, சுந்தர்மடம், யாழ்ப்பாணம். (33718)

பிறிமா, கிருஸ் சம்பு, புறொயிலர் குஞ்சுகளும், லோமன் பிறவுன் பேட்டுக் குஞ்சுகளும் 19-11-94 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். அத்துடன் 2½ மாதம் நிரம்பிய வான்கோழிக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ''இறைச்சிக்கோழி விற்பனை நிலையம்'', 15/7, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தி, நல்லூர். (33712)

மூன்று மாத வயதுடைய பொமனேரியன் பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. இராஜகுலேந்திரன், இல. 9, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (33683)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கில் கோண்டாவில் இ. போ. ச. டிப்போவுக்கு அண்மையாக களஞ்சிய வசதி கொண்ட, கட்டடத்துடன் கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி லிங்கா துரைராசா, சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, 19, பண்டாரக்குளம் ஒழுங்கை, நல்லூர். (சி-9660)

## மலிவு விற்பனை

3ஆம் தவணைப் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்காக ஆண்டு 3இல் இருந்து O/L வரை அனைத்து பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) 50 வீதம் கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond புத்தக நிறுவனம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7988)

## மணமகள் தேவை

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த 27 வயது உத்தரட்டாதி நட்சத்திரம் ஜேர்மன் விசாவுடன் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் உள்ளவர். தயவு செய்து முழுவிரத்துடன் கடிதமூலம் நம்பர்40, மேற்பார்த்து உதயன் சேவை நிலையம், சுன்னாகம். தொடர்பு கொள்ளவும். (7804)

## தவறிவிட்டது

School Art என்னும் ஆங்கில புத்தகம் 8-11-94இல் வேம்படிச் சந்திக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கா. பொன்னையா, கலைவாணி மில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (33716)

நீலக்கல் பதித்த மோதிரம் ஒன்று இளங்கலைஞர் மன்றத்தில் 10-11-94இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கோயில் வீதியில் உள்ள கராட்டி கழகத்தில் மோகன் மாஸ்ரரிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (33725)

## வியாழ மாற்றம்

(11-11-94 வியாழமாற்றம் ரூபா 10/- சத்யாவின் எல்லா ராசிகளின் பலன்கள்) எங்கும் விற்பனையாகின்றது. பாடசாலைப் புத்தகங்கள், இலங்கை இந்திய சஞ்சிகைகளுக்கும் யாழ். புத்தகசாலை, புதிய பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (33714)

## விசேஷ கழிவு

இலகு தோசை மா, இட்லி மா, அப்பம் மா ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன்கூட்டியே ஒழுங்குசெய்து விசேஷ கழிவைப் பெற்றுக்கொள்ளுங்கள். தொடர்பு: சகல அண்ணா தொழிலக கிளைகளிலும். (சி-9597)

## மணிக்கூடுகள் திருத்துதல்

சகல எலெக்ரொனிக் சுவர், மேசை, ஓட்டோமெற்றிக், கடிகாரங்களையும் மற்றும் கசற் றேடியோக்கள், T. V., டெக், கார் கசற்றுக்களையும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ள, டில்கா வாச் அன் றேடியோ, வேக்ஸ் 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (வானவில் அருகில்), கிளை: கண்டி றோட், சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி-9617)

## ஒலியின் இறுதிச் சடங்கு

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்திருந்து நேற்று முன்தினம் மரணமடைந்த ஒலி அபயகுண சேகராவின் இறுதிச் சடங்குகள் கொழும்பு கனத்தையில் நாளை ஞாயிறன்று நடைபெறும். (ஐ)

## தேவை

**(1) TEACHER'S –**
English Typing And Short - Hand.
Tamil Typing And Short - Hand.

**(2) CLERK –**

பிரபல்யமான தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு மேற்கூறப்பட்ட பதவிகள் கோரப்படுகின்றன. தொடர்பு கொள்ள வேண்டிய

இலக்கம் - 954,
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.

[சி/9621]

## யாழ். இந்து மகளிர் கல்லூரி
## ஆண்டு 6-க்கான அனுமதி-1995

இக்கல்லூரியில் ஆண்டு 6 அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்கள் 21-11-1994இல் இருந்து கல்லூரி காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து 10-12-1994க்கு முன்னர் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

-அதிபர்.

யா/இந்துமகளிர் கல்லூரி. [சி/9620]

உ

## திரிசதி அர்ச்சனைகள் தொகுப்பு
## ★ நூல் வெளியீட்டு விழா ★



அமரர்
**பா. சாமிரெட்ண சர்மா**
(இளைப்பாறிய தபால் அதிபர்)
அவர்களின்
**ஞாபகார்த்த**
திரிசதி அர்ச்சனைகள்
புஸ்தக வெளியீடு

(பிள்ளையார், முருகன், சிவன், அம்பாள், துர்க்கை, மஹாமாரி, புவனேஸ்வரி, தட்சணா மூர்த்தி, மகாவிஷ்ணு, மகாலெட்சுமி)

தலைவர்: கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் (தலைவர், இந்துநாகரித்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
இடம்: நல்லூர் ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயம்
காலம்: ஐப்பசி 27உ (13-11-1994) ஞாயிறு பி.ப. 2மணி

★ நிகழ்ச்சி நிரல் ★

விசேட பூஜை, இறைவழிபாடு
- ★ மங்கள விளக்கேற்றல்: — சிவஸ்ரீ ப. பரமசாமிக் குருக்கள் - கோப்பாய்; — சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் - மட்டுவில்
- ★ பிரார்த்தனை:
- ★ வரவேற்புரை: — பிரம்மஸ்ரீ பா. சர்வேஸ்வர சர்மா - அரியாலை
- ★ தலைமையுரை:
- ★ ஆசியுரை: — நியாயசிரோன்மணி பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - நல்லூர்; — சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவக்குருக்கள்
- ★ அருளுரை — ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் நல்லை ஆதீனம்
- ★ வெளியீட்டுரை: — சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் (தர்மசாஸ்தா குருகுலம் - இணுவில்)
- ★ முதற்பிரதி பெறுபவர்: — சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் (நீர்வேலி)
- ★ கௌரவப்பிரதி பெறுபவர்: — பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள் (தலைவர், சமஸ்கிருதத்துறை யாழ். பல்கலைக் கழகம்)
- ★ சிறப்பு பிரதி பெறுபவர்கள்:
  - சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக்குருக்கள் - நீர்வேலி
  - சிவஸ்ரீ தேவராஜக்குருக்கள் - அல்வாய்
  - சிவஸ்ரீ வைத்தியநாதக்குருக்கள் - ஊரெழு
  - சிவஸ்ரீ மகேஸ்வரக்குருக்கள் - சுதுமலை
  - சிவஸ்ரீ கு. பரமசிவக்குருக்கள் - தாவடி
  - சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள் - தெல்லியூர்
  - சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள் - மட்டுவில்
  - சிவஸ்ரீ கை. வாமதேவக்குருக்கள் - நல்லூர்
  - பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்தசர்மா - மருதனார்மடம்
  - பிரம்மஸ்ரீ நிர்மலேஸ்வரசர்மா - நவாலி
  - பிரம்மஸ்ரீ வைத்தியநாதசர்மா - கல்வியங்காடு
  - திரு. V. N. நாராயணசாமி
  - ஆதீனமகாசபைத் தலைவர் - வண்ணை பெருமாள் கோயில்
  - திரு. செ. அன்னலிங்கம் - தாவடி
- ★ பாராட்டுரை:
  - சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் அவர்கள் - சுன்னாகம்
  - பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் (யாழ். பல்கலைக்கழகம்)
  - துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
- ★ சிறப்புரை: — கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் (யாழ். பல்கலைக்கழகம்); பிரம்மஸ்ரீ சாம் சோமாஸ்கந்த சர்மா - நல்லூர்
- ★ பதிலுரை: — பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா - கோப்பாய்
- ★ நன்றியுரை — சா. குமரேசசர்மா - தாவடி

**அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்**

இவ்வண்ணம்:
சிவஸ்ரீ சாமி. சுந்தரேசக்குருக்கள்.

தாவடி. [சி-9662]

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

சின்னத்தம்பி அரியரத்தினம்
(குமாரசிங்கம்)

சென்ற 13-10-1994 இல் சிவபதமடைந்த சின்னத்தம்பி அரியரத்தினம் (குமாரசிங்கம்) இளைப்பாறிய மின்சார அத்தியட்சகர் அவர்களின் வீட்டுக்கிரியை இன்று (12-11-1994) சனிக்கிழமை 12-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பத்துடன் சமுகமளித்து வைபவத்தை சிறப்பித்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள:
திருமதி ர. அரியரத்தினம்,
பிள்ளைகள்
அ. நித்தியானந்தன், அ. சதானந்தன்,
அ. ஆனந்தறதி.

கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய். [8012]

## 31-ம் நாள் நினைவஞ்சலி




உயர்திரு
**இ. வே. இராமசுவாமி விதானையார்**

தோப்பு - அச்சுவேலி தெற்கு மீனாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவராக நீண்ட காலம் சிறப்புற சேவையாற்றி 11-10-94இல் சிவபதம் அடைந்த சைவச்செம்மல் திரு. இ. வே. இராமசுவாமி விதானையார் அவர்களது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென அம்பாளை பிரார்த்திப்பதுடன், அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மீனாட்சி அம்மன் ஆலய -
பரிபாலன சபையினர்.

தோப்பு - அச்சுவேலி தெற்கு. (33727)

## ஆறாம் ஆண்டிலும் ஆறாததுயர்



பொருளியல் ஆசான்
**அமரர் நாகேந்திரம் கிருஷ்ணானந்தன்**

தோற்றம்: 10-01-1951 மறைவு: 12-11-1988

விடிவுக்கு வழிகாட்ட அறிவு கூற
மிகுபேர்கள் உனைப்போலத் தேவை என்று
அடிக்கடி நாம் நினைப்பதுண்டு
ஆனால் நீயோ;
அவசரமாய் எம்மைவிட்டு அகற்றப்பட்டாய்
விடுதலைக்குக் களப்பலியோ?

உங்கள் நினைவை நெஞ்சில் இருத்தி வைக்கும்:
குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

யுனிவேர்சல்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-9659)

## சோதிடர் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், நவ. 12

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த பயிலரங்கும், ஆய்வரங்கும் நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும். பயிலரங்கை கே. சாம்பசிவம் நடத்துவார்.

கடந்த வார ஆய்வரங்கின் தொடர் விரிவுரைகளை திரு. ப. கனகலிங்கம். திரு. எஸ். பத்மநாதன் திரு. எஸ். இராசதுரை, திரு. ஐ. வைத்தியநாதர் ஆகியோர் நிகழ்த்துவர். (ஐ)

## உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த போட்டிகள் மட்டும் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்
பல்கலைக்கழகம்
## மகாபொல கொடுப்பனவு

முதலாம் வருட மாணவர்களுக்கான 5 ஆம் தவணைப்பணமும், ஏனைய வருட மாணவர்களுக்கான 8 ஆம் தவணைப்பணமும் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக்கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவிற்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தற் பலகைகளில் இடப்பட்டுள்ளது.

பதிவாளர்
(சி/9663)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஐ. தே. கட்சியின் வீழ்ச்சி

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவின் வெற்றி வரலாற்றுச் சிறப்பு மிக்கது. எதிர்பாராத மிகப் பெரும் சாதனை.

சந்திரிகாவின் பெருவெற்றிக்குரிய காரணங்களையும், சிங்கள மக்கள் இனவாதத்தை நிராகரித்தமைக்கான காரணங்களையும் ஆராயப்புகின் பதினேழு வருடங்கள் அரச கோலோச்சிய ஐ.தே.கவின் வீழ்ச்சி பட்டெனத் தெரியும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமே மாறி மாறி நாட்டை ஆண்டன. மொத்தமுள்ள 46 வருடங்களில் 30 வருடங்கள் ஐக்கிய தேசியக் கட்சியும், பதினாறு வருடங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆட்சி செய்தன.

ஐ. தே. கட்சி நாற்பதுகளின் பிற்பகுதியில் இருந்தே, இனவாதத்தை வளர்த்து, அதனைத் தனது அரசியல் ஆதாயமாக்கியது தெரிந்ததே. சிங்கள மக்கள் 1977 பொதுத் தேர்தலில் வழங்கிய மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை வாய்ப்பாக்கிக் கொண்டு, புதிய அரசமைப்பு என்ற பெயரில், தாமும் தமது கட்சியும் நீண்டகாலம் அரசியல் ஆதாயம் அனுபவிக்க பல குள்ளத்தனமான நடவடிக்கைகளை ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேற்கொண்டார்.

தமிழர்களின் கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தாலும் அவர்களின், உரிமைகளை வழங்குவதற்கு ஜே. ஆர். விரும்பவில்லை. போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று நாடாளுமன்றத்தில் முழங்கியும், தமிழ் எம். பிக்களை நாடாளுமன்றத்தில் இருந்து துரத்தியும் தமிழ் மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதம் என்ற ஆயுதத்தை எடுத்தார்.

தமிழர்களுக்கு எதிராக ஏவப்பட்ட இனவாதத்தின் மறுவடிவமான அரச பயங்கரவாதம் என்ற ஆயுதம், நாளடைவில் சிங்கள மக்களையும் தாக்கியது. வருடங்கள் வளர அது அரச அரசியல் கொலைக் கலாசாரமாக உருவெடுத்தது.

பிரேமதாசா காலத்தில் நிலைமை மிக மோசமடைந்து அரசியல் கொலைகள் சர்வ சாதாரணமாக மலிந்தன. பாதாள உலகம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு, ஐ.தே. கட்சிக்கு எதிரான அரசியல் கருத்துடையவர்களின் உயிர்கள் உறிஞ்சப்பட்டன.

பிரேமதாசா பரலோகம் போக, ஜனாதிபதி சிம்மாசனத்துக்கும் ஐ. தே. க. தலைமைப் பதவிக்கும் ஏற்றப்பட்ட டி. பி. விஜேதுங்காவோ இனவாதத்தை உச்சப்பாட்டுக்கு கொண்டு சென்றார். தமிழர்கள், முஸ்லிம்களின் வாக்குகள் இன்றியே சிங்களவர்களின் வாக்குகளை மட்டுமே பெற்றுத் தாம் மீண்டும் ஜனாதிபதியாகப் போவதாகக் கூறினார்!

இந்த இனவாதம் ஓகஸ்ட் பொதுத் தேர்தலில் சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்ட போதிலும், ஐக்கிய தேசியக் கட்சியினர் காமினி கொலையைப் பயன்படுத்தி, இனவாத உணர்வை மீண்டும் பச்சையாக ஊட்டி, வழமைபோல அதில் அரசியல் ஆதாயம் தேட முயன்றனர். இனவாதத்தை இனிமேல் சிரணித்துக் கொள்ளப்போவதில்லை என்று கூறுவது போல, தென்னிலங்கை மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. கவினரைத் துரத்தி துரத்தி அடித்திருக்கின்றனர்!

நாட்டில் உள்ள மொத்தம் 160 தொகுதிகளில் ஒரு தொகுதியில் மட்டுமே ஐ. தே. கட்சியினால் வெல்ல முடிந்தது. தெற்கில் தமக்கு 43 சதவீத வாக்கு அடித்தளம் என்று கூறியவர்கள் 38க்குக் கீழே விழுந்து விட்டார்கள்! இனிமேல் எழுவது, திமிர்வது எல்லாம் கஷ்டமே!

இனவாதம் இந்த நாட்டைச் சிரழிக்கும் என்பதனை அனுபவ ரீதியாகச் சிங்கள மக்கள் உணர்ந்திருக்கிறார்கள், அவர்களிடம் ஏற்பட்ட மனத்திருப்பம் வரவேற்கப்பட வேண்டியதும் பாராட்டப்பட வேண்டியதும் ஆகும். இந்த மாற்றம் நாட்டின் அரசியலில் புதிய அத்தியாயம் ஒன்றைத் திறந்து வைக்கும் என்று நம்பலாம்.

## இனவாத சக்திகளுக்கு பெரும் தோல்வி இது!

மணிலா, நவ. 12

ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. இப்படி படு தோல்வி அடையும் என்பது யாரும் எதிர்பாராதது என்றும்—

சந்திரிகா இனி பெரும் பலத்துடன் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு செல்லக் கூடும் என்றும் —

கொழும்பில் உள்ள மேற்குலக தூதரக வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

''இலங்கையில் இனவாத சக்திகள் தோல்வியடைந்து விட்டன. அமைதியின் தேடலுக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் மக்கள் தந்த தீர்ப்பு இது— என்று தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா குறிப்பிட்டார்.

''இலங்கையில் இனவெறி பிடித்த சக்திகளுக்கு இது பெரும் தோல்வி'' என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளது.

''சமாதான முன்னெடுப்புக்கு கிடைத்த பரிசு இது'' என்று இ. தொ. க. கருத்து வெளியிட்டுள்ளது. (உ-3)

## வைபவமின்றி விலகுவார்

திரு. டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவது தொடர்பாக வைபவங்கள் ஏதும் நடத்தப்படமாட்டா என்று ஜனாதிபதி செயலக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (உ-எ-6)

## உபதபால் அதிபர்கள் அரச ஊழியர்களாவர்

### அமைச்சர் சமரவீர அறிவிப்பு

கொழும்பு, நவ. 12

சேவையில் உள்ள சகல உபதபால் அதிபர்களும் எதிர் வரும் ஜனவரி மாதம் முதல் அரசாங்க ஊழியர்களாகக் கணிக்கப்படுவர்.

தபால் மற்றும் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர முன்கண்டவாறு அறிவித்துள்ளார்.

உபதபால் அதிபர்களுக்கு ஓய்வூதியத்துடன் நிரந்தர அரச நியமனம் வழங்கப்படும்.

இதற்கான அங்கீகாரம் விரைவில் அமைச்சரவையிடம் இருந்து பெறப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மாத்தறை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போது அவர் இத்தகவல்களை வெளியிட்டார். (உ-எ)

## மன்னம்பிட்டி சிங்கள ம.வி. அதிபர் கடத்தப்பட்டார்

கொழும்பு, நவ. 12

மன்னம்பிட்டி சிங்கள மகா வித்தியாலய அதிபர் டபிள்யு. ஏ. பி. குணசேகரா பொலீஸ் மற்றும் இராணுவ சீருடை அணிந்தோரால் கடந்த 27 ஆம் திகதி இரவு கடத்தப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

இவரின் மனைவி டபிள்யு. எம். பி. கமலாவதி நிலங்க மல்லபுர கனிஷ்ட கல்லூரியின் அதிபராக இருக்கிறார்.

சம்பவதினம் பொலீஸில் இருந்து வந்திருப்பதாகக்கூறி பொலீஸ் மற்றும் இராணுவ சீருடையில் ஆயுதங்களுடன் சென்றவர்கள் குணசேகராவைக் கடத்திச் சென்றனர் என்று முறையிடப்பட்டுள்ளது.

பொலன்னறுவைப் பொலீஸார் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## யுத்தத்தில் கொல்லப்பட்ட படையினர் நினைவுநாள்

கொழும்பு, நவ. 12

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் கொல்லப்பட்ட படையினரை நினைவுகூரும் நிகழ்ச்சி நாளை மறுநாள் அனைத்து மாவட்டங்களின் பிரதான நகரங்களிலும் நடைபெறவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் வேண்டுகோளுக்கு இணங்க இந் நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு விகாரமகா தேவி பூங்காவில் படையினரின் நினைவு சமாதிக்கு அருகில் பிரதான நிகழ்ச்சி காலை எட்டு மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

## அலதூறு பிரசுரங்கள் வைத்திருந்த இருவர் கைது!

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவை அவதூறு செய்யும் துண்டுப்பிரசுரங்களை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சிறிபால, பிரேமசிறி ஆகியோரை நாளை வரை விளக்கமறியலில் வைக்கும்படி கோட்டை நீதிவான் உத்தரவிட்டார்.

புலி, கதிரை ஆகிய சின்னங்கள், பிரதமரின் படம், அவரது பெயர் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றைச் இச் சந்தேக நபர்கள் வைத்திருந்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி அரச சட்டத்தரணி நீதிவானைக் கேட்டுக் கொண்டார். (உ-எ)

## 'திரிசூல்' பத்திரிகைஆசிரியர் கைதானதன் காரணம்

கொழும்பு, நவ. 12

சந்திரிகாவை ஆதரிக்கும்படி பிரபாகரன் உத்தரவிட்டுள்ளார் என்ற செய்தியைப் பிரசுரித்ததற்காகவே 'திரிசூல்' என்ற சிங்கள வார இதழின் ஆசிரியர் திலக் வெஹெல்ல ஜனாதிபதி தேர்தலுக்கு இருதினங்கள் முன்பதாக கைது செய்யப்பட்டார் என இப்போது தகவல் வெளியாகியுள்ளது.

அச்செய்தி பிரசுரமான 'திரிசூல்' பிரதிகளும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன. பொலீஸ் அதிபர் புண்ணியா டி சில்வா தலைமையிலான பொலீஸ் கோஷ்டியே அவரைக் கைது செய்தது. அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்பது தெரிந்ததே. (உ-எ)

## வாழைச்சேனைப் பகுதியில் இரவில் நடமாடத் தடை!

கொழும்பு, நவ. 12

வாழைச்சேனைப் பகுதியில் உள்ள கிண்ணையடிக் கிராமத்தில் மாலை 6 மணிக்குப் பின்னர் மக்கள் நடமாடுவதற்கு இராணுவம் தடை விதித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை—

மீராவோடை கிண்ணையடிவாவியில் மாலை 6மணிக்குப் பின்னர் எவரும் மீன் பிடிக்கக் கூடாது என்றும் இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

மாலை 6 மணியானதும் மீன்பிடித் தோணிகள் அனைத்தும் இராணுவ முகாமின் முன்னால் உள்ள வாவிக்கரையில் நிறுத்தி வைக்கவேண்டும் என்றும் இராணுவம் தமது உத்தரவில் தெரிவித்துள்ளது. (உ-எ)

## ஆபாச காட்சி ரசனையை நாம் மறக்க வேண்டும்

### கலை நிகழ்வில் உரை

''சினிமாப் படங்களின் ஆபாசக் காட்சிகளை ரசிக்கும் நிலைமையை நாம் படிப்படியாக மறக்க வேண்டும்.''

இமையாணன் மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்பட்ட ''கலைத்தென்றல்'' நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தமிழீழக் கல்வி மேம்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு.க. அருள் (அருண்மாஸ்ரர்) இவ்வாறு கூறினார்.

மேற்படி நிகழ்வு அதிபர் திரு. ம. குட்டித்தம்பி தலைமையில் கடந்த 29ஆம் திகதி நடைபெற்றது.

அருண் மாஸ்ரர் மேலும் கூறியதாவது:

நாம் எமது பாரம்பரியக் கலைகளை வளர்த்தெடுப்பதில் கருத்தொன்றி நின்று எமது தேசியத் தலைவரின் தலைமையில் அவர் காட்டிய வழியில் செல்வோம்.''

''கலைத்தென்றல்'' நிகழ்வின் நடனம் நாடகம் ஆகியவற்றில் எமது கலைஞர்களின் உணர்வு பூர்வமான நடிப்புக் காட்சிகளை நாம் கண்டு களித்தோம் என்றும் அவர் கூறினார். (க-90)

## புலிகளின் குரல் வானொலியில்

**12 — 11 — 1994**
**சனி இரவு**

- ★ 8-01 — அறிவியற் கலசம்
- ★ 8-10 — நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-25 — நேயர் கடிதங்கள்
- ★ 8 - 30 — செய்திகள்
- ★ 8-40 — சித்திரம்-வேலணையூர் சுரேஸ் எழுதிய ''ஆச்சியின் மண்''
- ★ 9-00— இரவு நிகழ்ச்சிகள் நிறைவு

**13— 11 — 1994**
**ஞாயிறு காலை**

- ★ 7 - 02 — மாவீர வணக்கம்.
- ★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7 - 35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 — காலை நிகழ்ச்சிகள் நிறைவு

## ஆய்வுக்கிளை கூட்டம்

தமிழழீக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தேர்வுக்குழு ஆய்வுக்கிளை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இதன் பணிப்பாளராக ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் திரு.ஆர்.எஸ் நடராசாவும் உறுப்பினர்களாக பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் திரு.க.சின்னத்தம்பி திரு.சி.சிறீ சற்குணராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தேர்வுக்குழு நடாத்தும் எல்லாத் தேர்வுகள் தொடர்பாகவும் பலவிதமான ஆய்வுகளை இக்கிளை மேற்கொள்ளும் எனவும்,—

விரைவில் நடைபெறவுள்ள முதனிலை, இளநிலைத் தேர்வுகள் தொடர்பான தொகுப்பறிக்கையைத் தயாரிப்பதற்காக இக்கிளையினர் நாளை ஞாயிற்றுக் கிழமை பகல் 10 மணிக்கு தமிழ்ழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கேட்போர் கூடத்தில் கூடஉள்ளதாகவும்—

சகல முதன்மைக் கட்டுப்பாட்டுத் தேர்வாளர்களையும் சமுகந்தருமாறும் — தேர்வு ஆணையாளர் திரு.அ.சண்முகதாஸ் கேட்டுள்ளார். (இ)

## பயிற்சிநெறி தொடக்க நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.12

கிராமிய வளர்ச்சித்திட்டப் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்ச்சி இன்று சனி காலை 8.30 மணிக்கு மறவன்புலோ விஸ்ணு வித்தியாலயத்தில் யாழ்.மாவட்ட கிராமியப் பாசறை இணைப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ்-மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி.இளம்பரிதி பயிற்சி நெறியைத் தொடக்கி வைப்பார். (ஐ)

## தொலைக் கல்வி வகுப்புக்கள்

அச்சுவேலி,நவ.12

கோப்பாய்ப்பிராந்திய தொலைக் கல்விநிலையத்தின் 91-94 ஆம் வருடபயிற்சி ஆசிரியர்களுக்கான வகுப்புக்கள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் நடைபெறும். (ஐ-11)

# அடுத்தகட்ட உலர்உணவு விநியோகம் தாமதமாகும்

## பொருள்கள் கையிருப்பில் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ்.மாவட்டத்தில் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு செப்டெம்பர் மாதத்துக்கான கடைசி இரு வாரங்களுக்குரிய நிவாரண விநியோகம் தாமதமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உலர் உணவு நிவாரணம் வழங்கத் தேவையான பொருள்கள் போதியளவில் கையிருப்பில் இல்லை என்றும் —

தற்சமயம் பருத்தித்துறைக்கு வந்துள்ள ''கோமாரி'' கப்பல் கொழும்பு திரும்பிச் சென்று மீண்டும் பருத்தித் துறைக்குப் பொருள்களை ஏற்றிவந்த பின்னரே செப்டெம்பர் மாதத்தின் கடைசி இரு வாரங்களுக்கான உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்படும் என்றும் யாழ்.புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

செப்டெம்பர் மாதத்துக்கான முதல் இரு வார உலர் உணவு தற்சமயம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் கடற்றொழில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

# சந்திரிகா மலையக மக்களின் ஆதரவு பெற தொண்டா காரணமா?

## அப்படி முடிவு செய்யமுடியாது என்கிறார் அஷ்ரப்

லண்டன், நவ. 12

'திரு. தொண்டமான் அரசுடன் சேர்ந்ததால் தான் மலையக மக்கள் தங்களுடைய ஆதரவை சந்திரிகாவுக்கு கொடுத்தார்கள் என்ற முடிவுக்கு வருவது கஷ்டமாக இருக்கிறது.''

அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் மேற்கண்டவாறு பி பி.ஸிக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது;—

தேர்தல் முடிவுகளை பார்க்கும் போது திரு. தொண்டமான் அரசுடன் சேர்ந்ததால் தான் மலையக மக்கள் சந்திரிகாவுக்கு வாக்களித்தார்கள் என்று கூறமுடியாது.

நுவரெலிய மாவட்ட முடிவை கவனித்தேன். மலைநாட்டில் பல இடங்களில் மலையக தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். ஐ. தே. கவுக்கு வாக்குகள் போயிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இ.தொ.காவின் நடுநிலைமை முடிவுக்கு மத்தியிலும் மலையக மக்கள் சந்திரிகாவுக்கு ஆதரவு வழங்க முன்னரே முடிவு செய்திருந்தனர் என்றார்.

ஐ. தே. க. சமாதானம் என்று வாயளவில் பேசி வந்திருக்கிறது. மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா முயற்சிகளை மேற்கொண்டார். வட்டமேசை மாநாடுகளை, சர்வகட்சி மாநாடுகளை கூட்டினார். இருந்தாலும் கூட ஐ. தே. கவுக்கு சமாதானத்தில் நம்பிக்கை இல்லை என்ற முடிவுக்கு வந்துள்ளேன்.

இப்போது இந்த நாட்டு மக்கள் — பெரும்பான்மை மக்கள், மலையக மக்கள் எல்லோரும் ஒன்று கூடி— புதிய பிரதமரை சமாதானப் புறாவாகக் கண்டுள்ளனர்.

இந்த சூழ்நிலையில் விடுதலைப் புலிகளுடனும் பேச வேண்டும்;

விடுதலைப் புலிகள் மட்டுமன்றி, சமாதானத்துக்கு அவசியமான தரப்பினர் யார் என்பதை நாம் அடையாளம் காணவேண்டும்.

அடையாளம் கண்டு — குறிப்பாக வடக்கில் வாழும் தமிழ் பேசும் சமூகம்— தமிழ் சமுதாயம், முஸ்லிம் சமூகம், வட— கிழக்கில் வாழுகின்ற சிங்கள சமுதாயம் இந்த மூன்று தரப்பினரினதும் அபிலாஷைகளுக்கு ஊறு ஏற்படாதவகையில் இந்த சமாதான முயற்சிகளை சந்திரிகா எடுத்துச் செல்லவேண்டும்.

இராணுவம், ஆயுதப்படை என்பன சமாதான முயற்சிகளுக்கு துரோகமான நிலைப்பாட்டை கொண்டுள்ளார்கள் என்று நினைப்பது தவறாகும்.

ஆயுதப்படைகள் எமது சமாதான முயற்சிக்கு குறுக்கே நிற்கும் என்று என்னால் கற்பனைகூட செய்ய முடியாதுள்ளது. அவர்கள் எண்ணமும் இந்த நாட்டில் விரைவாக, தெளிவாக சமாதானத்தை கொண்டுவர வேண்டும் என்பதுதான்.

ஐ. தே. க. ஆட்சியின் கீழ் சமாதானம் வேண்டுமென்ற அரசியல் தலைமைத்துவம் இருக்கவில்லை. அந்த குறை இன்றுடன் நீங்கியுள்ளது.

இந்த அடிப்படையில் இராணுவம் சமாதான முயற்சிக்கு ஆதரவு தரும் என நினைக்கிறேன்— என்றார் (இ-3)

## தொண்டமான் விவகாரம்: விரைவில் ஐ. தே. க. முடிவு

கொழும்பு, நவ. 12

தொண்டமான் விவகாரம் குறித்து இம்மாத இறுதியில் கூடும் ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐ. தே. க. பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

''ஐ. தே. க. தேசியப்பட்டியல் எம். பியாக இருந்து கொண்டு, தொண்டமான் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அமைச்சராகப் பதவியேற்ற விவகாரத்தில் உள்ள சட்ட நுணுக்கங்களை நாம் ஆராய்ந்து வருகின்றோம்'' — என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## ஜனாதிபதியாக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னமும் கூடாத நிலையில் அந்த முடிவு அதிகாரபூர்வமானது அல்ல என்றும் —

ஆயினும் இந்தநியமனத்தை எவரும் எதிர்ப்பார்கள் என்று தாம் கருதவில்லை என்றும் — தகவல் விமானப் போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராகப் பதவியேற்பது இது மூன்றாவது தடவையாகும்.

அவரது கணவரான எஸ் டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா 1959 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் உலகின் முதலாவது பெண் பிரதமரானார். பின்னர் 1970 ஆம் ஆண்டுகளிலும் அவர் அந்தப் பதவியில் இருந்தார்.

இந்த தடவை அவர் பிரதமராகப் பதவியேற்றாலும் அவரது கையில் அதிகாரங்கள் எதுவும் இருக்காது — என பி.பி.ஸி. தெரிவித்தது.

அரசமைப்பைத் திருத்தி அமைப்பது தொடர்பான தனது திட்டங்களை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இன்னும் இரு வாரங்களில் ஒரு சிறப்புக் குழுவின் முன் சமர்ப்பிக்கும் என்றும் —

அரசமைப்பு மாற்றியமைக்கப்பட்டபின்னர் தாயும் மகளும் தமது பதவிகளைப் பரிமாறிக்கொள்வர். சந்திரிகா மீண்டும் பிரதமராவார். ஸ்ரீமாவோ அதிகாரங்கள் இல்லாத ஜனாதிபதி ஆவார் என்றும் — பி.பி.ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்தார். (இ-எ-ஐ-6)

## தற்போதைய....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும் எனக் கூறப்படுகின்றதே. அதற்கு ஏன் இவ்வளவு நீண்டகாலம் தேவைப்படுகின்றது? — என்று அமைச்சரிடம் கேட்கப்பட்டது.

இந்த விடயத்தில் இணக்க நிலை ஏற்படுவதற்கு நீண்ட கலந்துரையாடல் — ஆலோசனை —தேவைப்படுகின்றது; அதனால் அதிக காலமும் தேவைப்படும்.

நாம் இப்போது செய்யப் போவது என்னவென்றால் — பின்பற்றப்போகும் வழிமுறை என்னவென்றால் — தற்போதைய நாடாளுமன்றம் அரசமைப்பு நிர்ணய சபையாக கூடி, அரசமைப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக ஆராய்வதுதான்.

இந்த சபைக்கு அரசு தனது யோசனைத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்; அரசமைப்புநிர்ணய சபையில் தமது கருத்துக்களை எதிரணியினர் தெரிவிக்க வசதியாக நீண்ட விவாதத்துக்கு இடமளிக்கப்படும். — இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார். (உ)

## புலிகளுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர் காமினி திஸாநாயக்கா படுகொலை செய்யப்பட்ட பின்னர் —

அந்தக் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்ற குற்றச்சாட்டு ஓங்கி வந்த பின்னர் —

இந்த நிலையிலும் அமைதி திரும்ப வேண்டும் என்ற தாகம் அனைத்தையும் மீறி வந்துள்ளது என மற்றொரு பத்திரிகையான 'கார்டியன்' தெரிவித்துள்ளது

லண்டனில் நேற்று வெளியான பத்திரிகைகள் பலவும் சந்திரிகாவின் தேர்தல் வெற்றியை புகழும் விதத்தில் செய்திகளை வெளியிட்டிருந்தன. (ஐ)

## அனுருந்தவுக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூட தமது ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பு அமைச்சை தன் வசம் வைத்துக் கொண்டு —

தேசிய பந்தோபஸ்து அமைச்சு என்ற புதிய அமைச்சை உருவாக்கியே அதற்கு பொறுப்பான அமைச்சராக லலித் அத்துலத் முதலியை நியமித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது (உ)

## ஒப்பரேஷன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல இடங்களிலும் மக்கள் அஞ்சலி செலுத்தினர். சில இடங்களில் புதிதாக உருவப்படங்கள் திரைநீக்கம் செய்யப்பட்டன.

சாவகச்சேரி கைதொழில் வர்த்தகர் சங்கத்தினரால் சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்பாக அமைக்கப்பட்ட லெப் கேணல் குணாவின் உருவப்படம் நேற்றுத் திரைநீக்கம் செய்யப்பட்டது.

பல இடங்களில் நினைவுக் கூட்டங்களும் நடைபெற்றன. (ஐ-4-30-11)

## முக்கிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொலை தொடர்பான புலனாய்வு நடவடிக்கைகளில் இந்திய நிபுணர்களின் உதவி தொடர வேண்டும் என்றும் இலங்கை அரசு கோரி உள்ளது.

காமினி திஸாநாயக்காவின் படுகொலை தொடர்பான புலனாய்வுகளில் உதவுமாறு இந்தியாவிடம் இலங்கை ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-4)

## தவறிவிட்டது

SSS போட்டு வட்டம் போட்ட கார் வீலகப் 10-11-94 அன்று கோவில் வீதிக்கும் தபால் கட்டைச் சந்திக்கும இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் வைற் கவுஸ் அந்தியகால சேவையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

180, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(33734)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீத இரத்தினம்
திரு. சி. மகேந்திரன்
அவர்களின் மாணவன்



## செல்வன செல்வராஜாவீ

அவர்களின்

# மிருதங்க அரங்கேற்றம்

இடம்: சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
காலம்: 12-11-94 சனிக்கிழமை மாலை 3-00மணி
தலைவர்: திரு. சோ. பத்மநாதன் அவர்கள்
(உப. அதிபர் பலாலி ஆசிரிய கலாசாலை]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திரு. திருமதி அ. செல்வராஜா தம்பதிகள்.
(பெற்றோர்)

15, ஈச்சமோட்டை,
கடற்கரைவிதி,
யாழ்ப்பாணம். (33722)

---

## CHRISTMAS CAKES DEMONSTRATION

நத்தார் காலத்துக்கான
கேக் செய்முறைகள்

1. றிச் கேக் (Rich Cake)
2. லவ் கேக் (Love Cake)
3. லைட் புருட் கேக் (Light Fruit Cake)
4. ஆமன் சீஸ் கேக் (Almond Cheese Cake)

காலம்: 20 — 11 — 1994 ஞாயிற்றுக்கிழமை

குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதால், 17-11-1994 க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

## யோகி
## ஹோம் சயன்ஸ் அக்கடமி

71, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[33726]

---

## LONDON ACCOUNTANCY CLASSES

May, June – 1995

C. I. M. A. – Stage I
and
A. A. T. – Inter

வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane, Jaffna.
[C-9622]

---

## கடை தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சிறிய அளவிலான கடை ஒன்று தேவை.

தொடர்பு;
இல. 714, மே/பா உதயன,
யாழ்ப்பாணம்.
[33729]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12—11—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

---

# போஸ்கோ

இல. 3, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
ஆதரவில்

ROTARACT CLUB

## யாழ். மிட்ரவுண் றோட்டறக்ட் கழகம்

நடத்தும்
மாபெரும்

## கராத்தே இறுதிப் போட்டி

மண்ணிறப் பட்டிக்கான சண்டைப் போட்டிகளுடன் ஆரம்பமாகும்.

இடம்: யாழ். பல்கலைக்கழக முன் மைதானம்
காலம்: 12 - 11 - 1994
நேரம்: மாலை 6.00 மணி

செயற்திட்ட இயக்குநர்
(சி/9665)

---

உ
சிவமயம்

இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்
"இந்து தர்மம்" - மலர் 2
[மாதாந்த ஆத்மீக சஞ்சிகை]

## வெளியீட்டு விழா

இடம்: சுன்னாகம் இராமநாதன் கல்லூரி
காலம்: இன்று (12 — 11 — 1994)
சனிக்கிழமை காலை 9-30 மணி

★ தலைவர்
சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்கள்

★ வரவேற்புரை
திரு. சு. சிவபாலன்
(கணக்காளர். இ. ச. பே. நி. ச. உறுப்பினர்)

★ வாழ்த்துரை
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்
(சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோயில்
பிரதமகுரு)
திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
(உபதலைவர், இந்து சமயப் பேரவை)
திரு. ஆ. மகாலிங்கம்
(பிரதேசச் செயலர், உடுவில்)
திரு. க. இரத்தினராசா
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், மருதனார்மடம்)

★ வெளியீட்டுரை
திரு. மா. வேதநாதன்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்)

★ மதிப்பீட்டுரை
திருமதி கலைவாணி இராமநாதன்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்)

★ முதற்பிரதி பெறுபவர்
இணுவில் ஸ்ரீ திருவரங்கம் சுவாமிகள்

அனைத்து இந்துக்களையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு:
அனைத்து இந்து மன்றங்களையும், தேவஸ்தானங்களையும் பிரதிகளைப் பெற்று அடியார்களுக்கு விநியோகிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

✶ நூல் வெளியீட்டு உதவியும், விழா ஏற்பாடும் உடுவில் கிராம இந்து சமய அபிமானிகள்.

சி. சக்திகிரீவன்
கௌரவ செயலாளர்
(சி-9661)

---

உ
மயிலணியைச் சேர்ந்த
சிவஸ்ரீசிவ.நாகேஸ்வரக்குருக்களின்

## தசாக கிரியையை

முன்னிட்டு
பிரார்த்திக்கின்றோம்

தமது பண்பான குருத்துவப்பணிமூலம் அடியார்களை இறைவன் பால் ஈர்க்கும் தன்மையை மேன் மேலும் வளர்த்த வழி காட்டியின் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய குருக்கள், அறங்காவலர்கள்,
இந்து பரிபாலன சபையினர்.

காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்,
நீர்வேலி. (33730)

---

## தவறிவிட்டது

திருமதி மணிமொழி சுப்பிரமணியம் என்பவருடைய அடையாள அட்டையும், பென்சன் வவுச்சரும், வங்கிப்புத்தகமும் கதிரவேலு பொன்னம்மாவின் பென்சன் வவுச்சரும சுன்னாகம சந்தையில் 1 - 11 - 1994 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிருஷ்ணா பத்திரிகை விற்பனையாளர் மந்திகையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:
[illegible]
(33733)

---

## விளையாட்டு நிகழ்வு

யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் ஆசிரியர்களுக்கான பட்மின்ரன் சுற்றுப் போட்டி இன்று காலை 8.30 மணிமுதல் யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும்.

## இன்று

கொழும்புத்துறை, நவ. 12
யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் மாதாந்த ஆத்மீக சஞ்சிகை "இந்துதர்மம்" மலர் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு இந்து சமயப் பேரவையின் காப்பாளர் சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.
(உ-30)

## தொழு நோய் கருத்தரங்கு

அச்சுவேலி, நவ.12
"தொழுநோய் — தடுப்பு முறைகளும் அறிகுறிகளும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று சனி பிற்பகல் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர்கல்லூரியில் நடைபெறவுள்ளது. அச்சுவேலி சுகாதாரப் பரிசோதகர் திரு. இ. இராசேந்திரம் இதனை ஏற்பாடு செய்துள்ளார்.
(ஐ-11)

## லெப். கேணல் அருணனுக்கு நினைவஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 12
பூநகரி கூட்டுப்படைத் தளத்தின் மீது கடந்த ஆண்டு நடத்தப்பட்ட "ஒப்பரேஷன் தவளை" நடவடிக்கையின் போது வீரச்சாவடைந்த லெப். கேணல் அருணனின் (சூட்) முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சிகள் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கல்வியங்காட்டில் நடைபெற்றன.

கல்வியங்காட்டுச் சந்தியில் உள்ள செல்லக்கிளி அம்மான் நினைவாலயத்தில் உள்ள அருணனின் உருவப்படத்துக்கு அவரது தந்தையார் மாலை அணிவித்தார்.

வலிகாமம் கோட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ருக்குமரன், மாவீரர் பணிமனை மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி அருச்சுனா ஆகியோர் ஈகைச் சுடர் ஏற்றினர். யாழ். மாவட்ட அரசியல்துறையைச் சேர்ந்த திரு. எழிலன் நினைவுரையாற்றினார். திருநெல்வேலி வாலையம்மன் ச. ச. நிலையத்தின் ஏற்பாட்டில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. (ஐ)

---

## அமைதிப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் — வெளிவிவகார அமைச்சுக்களின் — தென்னாசியாவுக்குப் பொறுப்பான அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினேன்.

எமது இனப்பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினை அல்ல. ஓர் இனத்தின் உரிமைகள் தொடர்பான பிரச்சினை என்று எடுத்து விளக்கினேன்.

தமது நாடுகள் எமது பிரச்சினையில் நேரடியாகத் தலையிட முடியாது என்று அந்த அதிகாரிகள் என்னிடம் கூறினர்.

ஆனால் அமைதிப் பேச்சு மூலம் இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காணுமாறு நாம் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய நாடாளுமன்றம் மூலம் இலங்கை அரசுக்கு ஊக்கமளிக்கவுள்ளோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தை சில நாடுகள் விரைவில் ஐரோப்பிய நாடாளுமன்றம் கூடும்போது விவாதத்துக்குச் சமர்ப்பிக்கவுள்ளன.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவேண்டும் எனக்கோரும் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்ற அந்த நாடுகள் திட்டமிட்டுள்ளன. என்றும் அவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

வடக்கு - கிழக்கு மக்களுக்கு உதவப் போவதாகக் கூறும் அதேவேளை அரசுக்கு ஆயுதங்களை வழங்கி வருகிறீர்களே என்று ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளிடம் கேட்டேன் ஆயுதங்கள் மூலம் அழிவுற்ற எமது பிரதேசங்களை புனரமைக்க அந்த ஆயுதங்களை வழங்கிய நாடுகளே நிதி உதவி அளிக்க வேண்டும் என்றும் நான் அவர்களிடம் தெரிவித்தேன். இவ்வாறு அருட்திரு எஸ். ஜே. இம்மானுவேல் தெரிவித்தார். (ஐ-3)

---

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை சோமசுந்தரம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கரம்பன் காளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சோமசுந்தரம் 8 - 11 - 94 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், வேலாயுதம், லெட்சுமி தம்பதிகளின் மருமகனும், சிவயோகத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பராசக்தி, திருமதி நாகலட்சுமி, ஐயாத்துரை, துரைராசா, மகேஸ்வரி, கமலேஸ்வரி, காலஞ்சென்ற கனகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், வனதாசன் (சுவிஸ்), குகதாசன் (சுவிஸ்), புஸ்பராணி, வசந்தராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசிங்கம், நகுலேஸ்வரன் (பிரான்ஸ்), தமயந்தி (சுவிஸ்), விஜயா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பவித்திரா, ஜீவித்திரா, துஷாந், நிசாந், லக்ஷனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

தகவல்:
சிவயோகம் (மணி)
(மனைவி)

காளி கோவிலடி,
திருநெல்வேலி.
(33735)

## சின்னத்தம்பி இரத்தினம்

கல்வியங்காடு புதுச் செம்மணி வீதியைப் பிறப்பிடமாகவும், கட்டுவன் சைவ மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இரத்தினம் அவர்கள் 10 - 11 - 94 இல் சிவபதமடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சரஸ்வதியின் அருமைக் கணவரும், இரத்தினாவதி, சரோஜாதேவி, சத்தியகுமார், ஜெயக்குமார், தன்மதி, லோகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகாலிங்கம், தங்கராசா, சாந்தினி, தபாபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம்சென்ற செல்லம் மற்றும் வல்லிபுரம், இராசையா, தங்கம்மா, காலம்சென்ற பாலு ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கல்வியங்காடு புதுச் செம்மணி வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நாளை 13 - 11 - 94 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
(33738)

## சுவாம்பிள்ளை ஜெயராசா

கொழும்புத்துறை வளன்புரத்தை வசிப்பிடமாகக் கொண்ட சுவாம்பிள்ளை ஜெயராசா 11.11.94 இல் காலமாகிவிட்டார்.

இவர் றூபியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுவாம்பிள்ளை மேரிஅன்னாவின் புதல்வரும், யோசவ், காலஞ்சென்ற றெஜினாவின் மருமகனும் ஜெயராணி, ஜெயரூபன், ஜெயசிறி, ஜெயசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விமலேந்திரன், ஜஸ்ரின் ஆகியோரின் மாமனாரும் ஜெயமணியின் அன்புச் சகோதரனும் நீலுஷா, பிறாங்கிளின், ஜெனிகார்த்திஷா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற ஞானேந்திரன், ஞானேஸ்வரி, மகேந்திரன், பாலேந்திரன், விக்கினேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

பூதவுடல் இன்று 12.11.94 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்திலிருந்து பிற்பகல் 3.00 மணிக்கு புனித சூசையப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலியின் பின் நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
றூபி
[மனைவி]

975/1, வளன்புரம்,
கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம்.
(33736

## அம்பலவாணர் தருமலிங்கம்

(இளைப்பாறிய வேலணை தபால் அலுவலக ஊழியரும், சோதிடரும்)
(வேலணை / சரவணை)

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சரவணையை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது யாழ்ப்பாணம், நாவலர் வீதி, மூத்ததம்பி அவெனியுவில் வசித்தவருமாகிய அம்பலவாணர் தருமலிங்கம் 11- 11- 94 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி அம்பலவாணர் தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதிகளின் மருமகனும். சத்தியதாசன் (அதிபர், யா/ சரவணை சின்னமடு றோ. க. வித்தியாலயம்- உப தலைவர் ஊர்காவற்றுறை ப. நோ. கூ. ச), சிவசக்தி (சுவிஸ்), புஸ்பகாந்தா, உமாகாந்தா (பிரான்ஸ்), சிவகுமார் (இந்தியா), விங்கேஸ்வரி (சுவிஸ்), இராசேஸ்வரி (இந்தியா), இரத்தினேஸ்வரி (குடும்பநல சேவையாளர் நாவற்குழி), விக்கினேஸ்வரி, மணிவண்ணன், தேவதாஸ் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இந்திரா, பரமலிங்கம் (சுவிஸ்) விக்னேஸ்வரன், வைரவநாதன் (பிரான்ஸ்), வர்ணகுமார் [சுவிஸ்], டேவிட்ராஜன் (இந்தியா), ஜெயந்தி [பொண்ட் கல்வி நிலையம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், காயத்திரி, பிரியதர்சினி, கஸ்தூரி, கார்த்திக், பார்த்திபன் ஆகியோரின் அருமைப் பேரனாரும், காமாட்சி, செல்லமுத்து, திருக்கேதீஸ்வரி, காலஞ்சென்ற ஆறுமுகதாஸ், கனகம்மா, செல்லம்மா. சிவமணி ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, வேலாயுதபிள்ளை, கனகசபை, கோபாலபிள்ளை மற்றும் மங்கையர்க்கரசி, இரத்தினம், தகுலாம்பிகை, சுந்தரம்மா, சுப்பிரமணியம், பேரம்பலம் ஆகியோரின் மைத்துனரும், பாலசிங்கம், காலஞ்சென்ற குருசாமி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12-11-94 சனிக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 10. 30 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
சத்தியதாசன்
(மகன்)

466/1, மூத்ததம்பி அவெனியு,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(33737)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org